செ.வெ.எண்: 15 – 2020 நாள்:10.07.2020

# விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இன்று (10.07.2020) விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டத்திற்குட்பட்ட குன்னம் ஊராட்சி, ஒற்றை ஊராட்சி, திருச்சிற்றபலம் கூட்ரோடு மற்றும் தென்கொடிப்பாக்கம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் நாள்தோறும் கிருமி நாசினி தெளித்து தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்பதையும், நோய் தொற்று பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் காவல்துறையினர் வாயிலாக தடுப்பு கட்டைகள் ஏற்படுத்தி அப்பகுதியில் வெளிநபர்கள் உள்ளே செல்லாதாவாறும் மற்றும் அப்பகுதியினை சேர்ந்தவர்கள் வெளியே செல்லாதாவாறும் கண்காணிப்பட வேண்டும் என்றும், ஒலிப்பெருக்கி வாகனத்தின் வாயிலாக அரசு அறிவித்துள்ள கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறதா என்பதையும், மேலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சுகாதாரத்துறையினர் பணியாளர் வாயிலாக சளி, இருமல், மூச்சுத்திணறல் மற்றும் காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளை கண்டறிந்து முறையான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்றும் மற்றும் பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியினை ஏற்படுத்தும் வண்ணம் நோய் எதிர்ப்பு சத்து மாத்திரை மற்றும் கபசுரகுடிநீர் வழங்கப்படுகிறதா என்றும், மேலும், வேளாண்மைத்துறை சார்பில் காய்கறிகள் மற்றும் பழங்கள் உள்ளிட்ட பொருட்கள் வாகனங்கள் மூலம் அவரவர் வீட்டிற்கே வந்து வழங்கப்படுகிறதா என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி, வானூர் வட்டாட்சியர் தங்கமணி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.முருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.**